பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 11 2024 **SUNDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- 9வது சீக்கிய மதகுரு, குருதேஜ் பகதூரின் போதனைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் 116-வது மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மூன்று நாள் பயணமாக இன்று இத்தாலி புறப்பட்டுச் செல்கிறார்.
- பூட்டான் பிரதமர் திரு. **Tshering Tobgay** மூன்றுநாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.
- பெர்தில் நடைபெறும் இந்தியா-ஆஸ்திரேலியா அணிக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

>>>><<<<

மனித மாண்புகளை காக்கவும், சீக்கிய மதத்தை பாதுகாக்கும் விதத்திலும் தமது உயிரை தியாகம் செய்த சீக்கிய மத்தின் 9வது குரு குருதேஜ் பகதூரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

1675ஆம் ஆண்டு தன்னுடைய இன்னுயிரை தியாகம் செய்த தினத்தை ஒவ்வோராண்டும் **Shaheedi** தினமாக சீக்கிய மக்கள் அனுசரித்து வருகின்றனர்.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், குருதேஜ் பகதூர் மிகச் சிறந்த ஆன்மிகவாதியாக திகழ்ந்தார் என்றும், அன்பு மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தும் விதத்தில் அவருடைய வாழ்க்கை அமைந்ததாகவும், உண்மைக்கும், நீதிக்கும் அவர் போராடியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குருதேஜ் பகதூரின் போதனைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று நடைபெறும் **Odisha Parba** நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

புதுதில்லியில் உள்ள ஒடியா சமாஜ் என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகிறார்.

ஒடிசா மாநிலத்தின் கலாச்சாரம், பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் விதத்தில் இந்த நிகழ்ச்சி இன்று தொடங்கி, 24ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

அம்மாநிலத்தின் கலாச்சாரங்களை எடுத்துரைக்கும் விதத்தில், வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>><<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் 116-வது மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>><<<<

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்ட் சட்டப்பேரவைகளுக்கு நடைபெற்ற தேர்தலில், பிஜேபி தலைமையிலான மஹாயுதி கூட்டணி மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணி, ஜார்க்கண்ட் மாநிலத்தில் வெற்றி பெற்றுள்ளது.

மஹாராஷ்ட்டிர சட்டப்பேரவையின் மொத்தமுள்ள 288 இடங்களில் பிஜேபி 132 இடங்களை கைப்பற்றியுள்ளது.

ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா கட்சி, 57 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

அஜித்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் 41 இடங்களில் வென்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி 16 இடங்களிலும், சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் 10 இடங்களிலும், உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி 20 இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மொத்தமுள்ள 81 இடங்களில் ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா 34 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி 16 இடங்களை கைப்பற்றியுள்ளது.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் 4 இடங்களில் வென்றுள்ளது.

பிஜேபிக்கு 21 இடங்கள் கிடைத்துள்ளன.

பிற கட்சிகள் 6 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

மஹாராஷ்ட்ர மாநிலத்தில் இம்மாதம் 20ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 13 மற்றும் 20ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல்கள் நடைபெற்றன.

இதற்கிடையே, ஜார்க்கண்ட் மாநிலத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம், இன்று ராஞ்சியில் நடைபெறுகிறது.

இதில் திரு. ஹேமந்த் சோரனை மீண்டும் முதலமைச்சராக தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

மஹாராஷ்ட்ர மாநில சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றுள்ளது, நல்லாட்சிக்கும், வளர்ச்சிக்கும் கிடைத்துள்ள வெற்றியாகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பிஜேபியின் செயல்வீரர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், தேர்தல் முடிவுகள் எதிர்மறை அரசியலுக்கு தோல்வியை அளித்துள்ளதாகவும், பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் பிஜேபி அதிக அளவில் வெற்றி பெற்றுள்ளது, மக்கள் கட்சியின் மீது நம்பிக்கை வைத்துள்ளதை எடுத்துக் காட்டியுள்ளதாக என்று கூறினார்.

வளர்ச்சி ஒன்றே முக்கியம் என்ற அடிப்படையில் இந்த தேர்தலில் மக்கள் வாக்களித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள் பிஜேபி மீது அதிக அளவில் நம்பிக்கை வைத்துள்ளதாகவும், அவர்களுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

தொடர்ந்து மூன்றாவது முறையாக மஹாராஷ்ட்ர மாநிலத்தில் அதிக இடங்களில் வெற்றிபெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய, மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவை தேர்தல் வெற்றி கூடுதல் பலத்தை அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மஹாராஷ்ட்ர மாநிலத்தில் உலக தரத்திலான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பிஜேபி அமைத்து தரும் என்று அவர் கூறினார்.

காங்கிரஸ் கட்சி, மக்களை மறந்துவிட்டு வாரிசு அரசியலில் மட்டுமே அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், இது ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

வாக்கு வங்கிக்காகவே காங்கிரஸ் கட்சி வக்ஃப் வாரியத்தை அமைத்ததாக அவர் குற்றம் சாட்டினார்.

நாடுமுழுவதும் ஒரே அரசியல் சாசன சட்டம் தான் இருக்க முடியும் என்றும், அது பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அமைத்துக் கொடுத்த அரசியல் சாசனம் மட்டுமே இந்தியாவில் செல்லுபடியாகும் என்றும் அவர் கூறினார்.

காஷ்மீரில் அரசியல் சட்டப் பிரிவு 370-ஐ மீண்டும் கொண்டு வருவதற்கு உலகில் உள்ள எந்த சக்தியாலும் இயலாது என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

**>>>><<<<**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நாளை தொடங்கவுள்ள நிலையில், அனைத்து கட்சிகளின் கூட்டத்திற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெறும் கூட்டத்திற்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் தலைமையேற்கிறார்.

மக்களவை மற்றும் மாநிலங்களவை அலுவல்கள் சுமுகமாக நடைபெறுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை கோரும் வகையில், இந்தக் கூட்டத்தை மத்திய அரசு கூட்டியுள்ளது.

குளிர்கால கூட்டத்தொடர் நாளை தொடங்கி, டிசம்பர் மாதம் 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

வரும் 26ஆம் தேதி அரசியலமைப்பு சட்டம் இயற்றப்பட்ட நாளை ஒட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், அன்றைய தினம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அலுவல்கள் நடைபெறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மூன்று நாள் பயணமாக இன்று இத்தாலி புறப்பட்டுச் செல்கிறார்.

**Fiuggi**–யில் நடைபெறும் ஜி.7 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார்.

அப்போது ஜி.7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை தனித்தனியாக சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ரோமில் நடைபெறும் 10வது **Mediterranean** பேச்சுவார்த்தையிலும் அவர் கலந்து கொள்கிறார்.

அங்கு புதிதாக கட்டடப்பட்டுள்ள இந்திய தூதரக அலுவலகத்தையும் திரு. ஜெய்சங்கர் திறந்து வைக்கிறார்.

**>>>><<<<**

பூட்டான் பிரதமர் திரு. **Tshering Tobgay** மூன்றுநாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிரதமர் திரு நரேந்திர மோடியை அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர், பல்வேறு துறைகளின் அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளை சந்தித்து உரையாடுகிறார்.

**>>>><<<<**

சூடானின் சினார் மாகாணத்தில் உள்ள சிங்கா நகரை சூடான் ஆயுதப்படையினர், மற்றொரு ராணுவப் படைப்பிரிவினரிடமிருந்து மீண்டும் கைப்பற்றியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் இரண்டு படைப்பிரிவினருக்கு இடையே தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது.

இதில் ராணுவப் படைப்பிரிவினர் பல்வேறு நகரங்களை கைப்பற்றி, அடக்கு முறையில் ஈடுபட்டுள்ளதால், அவர்களிடமிருந்து நகரங்களை மீட்கும் விதத்தில் சூடான் அரசு ஆயுதப்படை பிரிவினரை அங்கு களமிறக்கியுள்ளது.

**>>>><<<<**

பாகிஸ்தானின் கைபர் - **Pakhtunkhwa** மாகாணத்தில் உள்ள பழங்குடியினரிடையே ஏற்பட்ட கலவரத்தில் 37 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள இந்த பகுதியில் **Alizai** மற்றும் **Bagan** பழங்குடியினருக்கு இடையே, **Kurram** மாவட்டத்தில் சண்டை நடந்து வருகிறது.

இதன் காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் நடந்த வன்முறையில் 50 பேர் உயிரிழந்தனர். 120க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தற்போது மீண்டும் அங்கு இரு பிரிவினருக்கும் இடையே கலவரம் ஏற்பட்டுள்ளதை அடுத்து, இதனை தடுத்துநிறுத்தும் விதத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறு அம்மாகாண முதலமைச்சர் திரு. **Ali Amin Gandapur** கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>><<<<**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

இரண்டாம் நாளான நேற்று, இந்தியா இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 172 ரன் எடுத்துள்ளது.

ஜெய்ஸ்வால் 90 ரன்னுடனும், கே எல் ராகுல் 62 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது இந்திய அணி 218 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

பெர்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 67 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா, 104 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பும்ரா அபாரமாக பந்துவீசி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 150 ரன்.